# ஒரு மனிதனால் தனக்குள்ள எல்லாவற்றையும் தேவனுக்கு ஒப்புவிக்க மட்டும் முடியுமானால்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

4. ஆனால் நான் இதைச் சொன்னேன், **நீங்கள் ஒப்புக்கொடுப்பதையே தேவனால் உபயோகிக்க முடியும்.** சிம்சோனைப் போல, சிம்சோன் தன்னுடைய இருதயத்தை தேவனுக்கு ஒப்புக்கொடுக்கவில்லை. அவன் அதைத் தெலீலாளுக்குக் கொடுத்து விட்டான். ஆனால் அவன் தன்னுடைய பலத்தைத் தான் தேவனுக்குக் கொடுத்தான், அவனுடைய பலத்தை மாத்திரமே தேவனால் உபயோகிக்க முடிந்தது. அவ்வளவு தான்.

ஆனால் **ஒரு மனிதனால் தனக்குள்ள எல்லாவற்றையும் தேவனுக்கு ஒப்புவிக்க மட்டும் முடியுமானால், இப்பொழுது தேவை யானது எல்லாம் அவ்வளவு தான்**. **நீங்கள் உங்கள் - உங்கள் சரீரத்தை ஒப்புக் கொடுக்க முடியுமானால், தேவன் உங்கள் சரீரத்தை உபயோகிப்பார்**. **நீங்கள் உங்கள் சிந்தையையோ, உங்கள் இருதயத்தையோ, அது என்னவாக இருந்தாலும் அதை**

**ஒப்புக்கொடுக்க முடியுமானால், உபயோகிக்கும்படி நீங்கள் தேவனுக்குக் கொடுப்பதை அவர் உபயோகிப்பார். அவ்விதமாக ஒப்புக்கொடுக்கும்படியாகக் காணக்கூடிய யாரோ ஒருவரை கண்டுபிடிக்கும்படியாக அவர் தேடிக் கொண்டிருக்கிறார்.**

*செய்தி:* **மறக்கப்பட்ட மலைப்பிரசங்கம்**, ஏப்ரல் 25, 1961

★★★★★



